பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

06 12 2025 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. விளையாட்டு வீரர்கள் திறன்களை வளர்த்துக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. அரசியலமைப்பு சட்ட சிற்பி டாக்டர் பீமாராவ் அம்பேத்கரின் 70வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

4. ஹிமாச்சல், ஒடிசா மாநிலங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையேயான பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளின் வலுவான நட்புறவை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுக்கு குடியரசுத்தலைவர் விருந்தளித்தார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

நல்லுறவு, அமைதி, ஸ்திரத்தன்மை, சமூக-பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மேலும் வலுவடைந்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<>>>>

ஒழுக்கம், குழு உணர்வு, பொறுமை மற்றும் விளையாட்டுத் திறன் ஆகியவை விளையாட்டு வீரர்களின் தகுதியை மேம்படுத்திக்கொள்ள உதவிடும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் விளையாட்டு விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள 300க்கும் அதிகமான நாடாளுமன்ற தொகுதிகளில் நடைபெற்ற விளையாட்டு திருவழாவில் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

இது விளையாட்டின் மீதான அவர்களது ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று கூறினார்.

முன்னதாக நடைபெற்ற புவிசார் உச்சிநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், உள்நாட்டு மொத்த உற்பத்தி 3 மடங்கு அதிகரித்துள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

உணவு, விவசாயம், மருந்து உற்பத்தி, ஜவுளி மற்றும் வாகன உற்பத்தி துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து ரஷ்ய பொருளாதார மேம்பாட்டு அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்துவது குறித்தும் அந்நாட்டு அமைச்சர் திரு. Maxin Reshet Nikov உடன் விரிவான ஆலோசனை நடத்தியதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்காக அஷ்டலக்ஷ்மி என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பிராந்திய வளர்ச்சிக்காக 645 கோடி ரூபாய் மதிப்பிலான 11 திட்டங்களை காணொலி மூலம் அவர் தொடங்கி வைத்தார்.

மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் மேம்பாட்டுத் திட்டங்களை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பரிந்துரைகளை வழங்கும் வகையில் மாநில முதலமைச்சர்கள் தலைமையிலான 8 உயர்நிலைப் பணிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள், குறித்த காலத்திற்குள் இறுதி செய்யப்படும் என்று வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “இந்தியாவில் உற்பத்தி செய்வோம்” திட்டத்திற்கு ரஷ்யா தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக தெரிவித்தார்.

யுக்ரைனுடனான மோதல் குறித்து அந்நாட்டு அதிபர் திரு. புதின், பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் விரிவாக எடுத்துரைத்ததாக அவர் கூறினார்.

நாடுகளுக்கு இடையேயான மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக பிரதமர் அப்போது வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு வலுவான நிலையில் உள்ளதாக திரு. விக்ரம் மிஸ்ரி தெரித்தார்.

<<<<>>>>

அரசியலமைப்பு சட்ட சிற்பி டாக்டர் பீமாராவ் அம்பேத்கரின் 70வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

சட்ட வல்லுநரும், சமூக சீர்திருத்தவாதியுமான டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரைவுக் குழுவிற்கு தலைமை வகித்தார். விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக அவர் அரும்பாடுபட்டார்.

இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது அவருக்கு வழங்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் பிரேர்ணா ஸ்தல்-லில் உள்ள டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர்தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் விமான சேவைகள் பரவலாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பயணிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பயணிகளின் தடையற்ற போக்குவரத்துக்கு உதவிடும் வகையில் 37 ரயில்களில் கூடுதலாக 116 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

முக்கிய பகுதிகளுக்கு இயக்கப்படும் ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளது என்றும், அதிகபட்சமாக தெற்கு ரயில்வே கோட்டத்திற்குட்பட்ட 18 ரயில்களில் அதிக எண்ணிக்கையிலான பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

தென்மண்டல சுற்றுச்சூழல் மாநாடு இன்று தொடங்குகிறது.

சென்னையில் நடைபெறும் இந்த இரண்டு நாள் மாநாட்டை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாட்டை உச்சநீதிமன்ற நீதிபதி திரு. எம்.எம். சுந்தரேஷ் தொடங்கி வைக்கிறார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த வழிமுறைகள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

தொழில்துறை, கல்வி நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு இணைந்து செயல்படுவதன் மூலம் சர்வதேச அளவிலான ஆராய்ச்சிப் பணிகளை அதிகரிக்க முடியும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளில் வலுவான சூழல் அமைப்பை கட்டமைப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சி விகித்தை துரிதப்படுத்த முடியும் என்று கூறினார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளில் சிறு நகரங்களைச் சேர்ந்த இளம் தலைமுறையினரின் ஆர்வம் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்கான ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

ஹிமாச்சல், ஒடிசா மாநிலங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானா, சண்டிகட், தில்லி, ஜார்கண்ட், ஒடிசா, பஞ்சாப் ஆகிய பகுதிகளில் இன்று கடும் குளிர் நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகிளல் அடுத்த 2 நாட்களுக்கு பனிமூட்டம் காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

--------------

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

--------------

ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 10ஆம் தேதி தொடங்கி 13ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

துபாயில் நடைபெறும் இப்போட்டியில் 35 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 தடகள வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 122 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

<<<<The End>>>>